**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை

**<u>O.S. No.145/2024</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலைச்செல்வன் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ராதாகிருஷ்ணன் | கிராமம் | : | புதுக்குடி |
| | | | தொழில் | : | பூசாரி |
| | | | வயது | : | 52 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு விபரங்களை வழக்கறிஞருக்கு யார் சொன்னார்கள் என்றால் ராஜாராமன் என்பவர் தான் வழக்கறிஞருக்கு விபரங்களை கூறினார். ராஜாராமன் சொன்னதன் பேரில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராஜாராமன் தாவா சொத்திற்கு உரிமையுடையவரா என்றால் அவர் ஊர் முக்கியஸ்தர் ஆவார். வழக்கு சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு உரிமையுடைய சொத்து என்றால் அது எனக்கு தெரியாது. பூசாரி வேலை கொடுத்தார்கள் நான் செய்தேன். வழக்கு சொத்தானது வழக்கு தொடுத்த காலத்தில் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் இருந்தது. வழக்கு சொத்தானது எந்த ஒரு காலத்திலும் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளும் மற்ற நபர்களும் தான் வழக்கு சொத்திற்கு உரிமையாளர்ள் என்றால் சரியல்ல. வழக்கு விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராஜாராமனுக்கு தான் தெரியும். வழக்குரையில் சொல்லியது போல் பூசாரி மானியம் எதுவும் கிடையாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புதுக்குடி கிராமத்தில் இந்த வருடம் திருவிழா நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. அந்த திருவிழாவில் நான் பூசாரியாக பணி செய்யவில்லை என்றால் சரிதான். என்னை பூசாரி வேலை செய்யக்கூடாது என்று விரட்டிவிட்டார்கள். நான் கிராமத்து கோயிலின் பூசாரி பணி செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புதுக்குடி கிராமத்தின் உள்ள கோயில்களுக்கு ஜெயவேல் என்பவரும் சுந்தரமூர்த்தி என்பவரும் தான் பூசாரியாக இருந்து வருகிறார்கள் என்றால் திருவிழா காலத்தில் தான் அவர்கள் பூசாரியாக இருந்து

வருகிறார்கள். நான் மேற்படி சங்கதிகளை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.1 ஆவணத்தை சங்கத்தின் மூலமாக கோயில் அதிகாரிகளை அணுகி சான்றிதழை பெற்றேன். தனிப்பட்ட முறையில் எந்த விண்ணப்பமும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய அரசியல் செல்வாக்கு மற்றும் பணபலத்தின் காரணமாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை தனிப்பட்ட முறையில் விண்ணப்பம் செய்தால் மட்டுமே தரப்படும் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணமானது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.10 13:13:33 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal